**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6**

**ந.க.எண்.039671/எம்/இ2/2018, நாள். 05.09.2018**

பொருள்: பள்ளிக் கல்வி – 26வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு – 26வது National Children's Science Congress (NCSC) –2018 – NCSTC, DST, Govt of India – அறிவியல் தொழில்நுட்பத்துறை, இந்திய அரசு குழந்தை விஞ்ஞானி ஆய்வுத் திட்டம் – தமிழக பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பங்கேற்க அனுமதி கோரி பெறப்பட்ட கடிதம் – சார்பு.

பார்வை: சென்னை கோபாலபுரம் தமிழ்நாடு அறிவியல் இயக்ககத்தின் கடிதம் நாள். 14.06.2018.

******

பார்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு செயல்பாடுகளில் பங்கேற்க விருப்பமுள்ள மாணவ/மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள கடிதத்தின் விவரங்களை தெரிவிக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**
பார்வையில் காணும் கடித நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்:
முதன்மைக்கல்வி அலுவலர்கள்

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் TAMIL NADU SCIENCE FORUM

எண் 245 (பழைய எண் 130/3), அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை - 600086.
No.245 (Old No.130/3), Avvai Shanmugam Salai, Gopalapuram, Chennai - 600086.

தொலைபேசி Phone : 044 - 2811 3630

மின் அஞ்சல் E-mail : tnsfstatecenter@gmail.com | இணைதளம் Wesite : www.tnsf.in

**Prof. S. Mohana**
State President
Mobile : 94430 44642
E-mail : mohanatnsf@gmail.com

**A. Amalarajan**
State General Secretary
Mobile : 94880 54690
E-mail : amalarajtnsf@gmail.com

**S. Subramanian**
State Treasurer
Mobile : 75983 40424
E-mail : subramanitnsf@gmail.com


Date : 14.06.2018

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள்
தமிழக கல்வித்துறை
சென்னை

மதிப்பிற்குரிய இயக்குநர் அவர்களுக்கு வணக்கம்.

பொருள் : 26வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு – 26th National Children's Science Congress (NCSC) – 2018 – NCSTC, DST, Govt. of India – அறிவியல் தொழில்நுட்பத்துறை, இந்திய அரசு குழந்தை விஞ்ஞானி ஆய்வுத் திட்டம் – தமிழக பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பங்கேற்க அனுமதி கோரி.

இந்திய அறிவியல் தொழில்நுட்ப துறை, இந்திய அரசு சார்பில் கடந்த 25 ஆண்டுகளாக தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு என்ற நிகழ்வினை நடத்தி வருகிறது. இதனை தமிழகத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் அனைத்து மாவட்டங் களிலும் ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கருப்பொருள் மாறும். இவ்வாண்டுக்கான கருப்பொருள் " Science Technology Innovation for Clean, Green & Healthy Nation. இக்கருப்பொருளில் 10 முதல் 17 வயதுள்ள குழந்தைகள் இளையவர், பெரியவர் என இரண்டு பிரிவுகளில், 2 பேர் கொண்ட குழுவாக மூன்று மாதகாலம் ஆய்வு செய்வார்கள். பின்னர் அவர்களை மாவட்டம், மாநிலம், தேசிய அளவில் நடைபெறும் மாநாடுகளில் தெரிவு செய்யப்படுவார்கள். பின்னர் அகில இந்திய அளவில் நடைபெறும் இந்திய, உலக விஞ்ஞானிகள் பங்கேற்கும் Indian Science Congressலும் தாய்மொழிக் கல்வி மற்றும் ஆங்கிலத்திலும் தங்களட்ஜி ஆய்வினை சமர்ப்பித்து வருகின்றனர்.

இதற்கான வழிகாட்டி ஆசிரியர்கள் பயிலரங்கம் 2018 ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறும், 2018 அக்டோபர் மாதம் மாவட்ட மாநாடு, நவம்பர் இரண்டாவது வாரம் மாநில மாநாடு, தேசிய மாநாடு டிசம்பர் 27-31 நடைபெறும். தேசிய அளவிலான மாநாட்டில் இந்திய குழந்தைகள், தெற்காசிய நாடுகளின் குழந்தை களும், மற்றும் சவுதி அரேபிய குழந்தைகளும் பங்குபெறுகின்றனர்

எனவே தாங்கள் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு செயல்பாடுகளில் ஆசிரியர்கள், மாணவர்களையும் பங்குபெற அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி அனுமதி தந்து உதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

தங்கள் அன்புள்ள

14/06/18

(பேரா.சோ.மோகனா)
மாநிலத் தலைவர்

TAMIL NADU SCIENCE FORUM
Phone 28113630
PIN 600086
Chennai